MCOP.No. 02/2024

Date : 15.10.2025

Witness Name & Rank – ராஜாமணி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. இந்த வழக்கில் காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் எனது சின்ன மகள் புகார் கொடுத்தார். நான் இந்த விபத்தில் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி வாகனத்தை ஓட்ட ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது, நான் சொல்லியுள்ளது தவறு அவ்வாறு இருந்திருந்தால் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் சாலையை கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி கடக்கும் போது எனது கவனக்குறைவால் விபத்தை வரவழைத்துகொண்டேன் அந்த விபத்திற்கும்1ம் எதிர்மனுதாரருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.
2. எனவே 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தோட்ட வேலை செய்து ரூபாய் 30,000 சம்பாதிப்பதாக சொல்லி உள்ள நிலையில் அதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்எனக்கு 68 வயது ஆவதால் நான் கூறியுள்ள இழப்பீடு தொகை வட்டியுடன் மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது எனவே அதன் அடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்காக இழப்பீடு பெற வேண்டி தவறாக மருத்துவ ஆவணங்கள் தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது அல்ல என்றால் சரியல்ல. எனது மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)k.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---